இது உங்கள் இடம்

மன்னனே ஆர்.எஸ்.எஸ்.,க்கு தெய்வம்!

குஜராத்தில் பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஆர்.எஸ்.எஸ்., தொண்டர்கள் 3000 பேர் முழு மூச்சுடன் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டிருக்கின்றனர். அதுவும் பாதம் முழுவதும் ஒல்லொரு நொடித்திலும் ஆர்.எஸ்.எஸ்., கிளை வாரியாக குஜராத் பூகம்ப நிவாரணப் பணிகளுக்காக, உடைகள், உணவுப் பொருட்கள், மருத்துப் பொருட்கள் மற்றும் பணம் சேகரிக்கும் பணியில் ஆயிரக் கணக்கான விவலம் சேவகர்கள் ஈடுபட்டிருக்கின்றனர்.

ராமர் கோயில் பிரச்னை யாக இருந்தாலும், அயோத்தி ஆக்ரமிப்பாக இருந்தாலும், இயற்கை இல்லல்களை இருந்தாலும் சாமானிய மனி தனையும் ராமனாக நினைத்து, சாலுக்கு சேவை செய்த அனுமனைப் போல அடக்கத்தோடு பணி செய்து, மக்கள் மொண்டே மகேசன் தொண்டு என்று, ஆர்.எஸ்.எஸ்., தன் பணியில் சளைப்பதில்லை; இதுதான் வாலாறு.

— ஒரு சங்கம் வேண்டாம், கல்லாடை, (கன்னியாகுமரி மாவட்டம்)

இயற்கையின் சீற்றம்!

குஜராத்தில் ஏற்பட்ட பூகம் பத்தினால் மக்கள் அடைந்த துன்பம் அளவிடற்கரியது. இன்றைய அரியல்வாதிகள் தாங்கள் கட்டிய மாடமாளி கைகள், பங்களா வீடு, ஏ.சி., கார் இவற்றினை நினைத்து சந்தோஷப்பட்டுக் கொள்ளலாம்.

இதற்கும் மேல், 'சட்டம் தம் கையிலே, விரலைச் சொடுக்கினால் போலீஸ் ஓடி வரும்' என்றெல்லாம் நினைத்து புளகாங்கிதம் அடையலாம். ஆனால், இயற்கையின் சீற்றத்திற்கு முன்னால் தாம் எம்மாத்திரம் என்பதை இவர்கள் இப்போதாவது நினைத்துப் பார்க்க வேண்டும். மக்கள் இவர்களை 'ஆட்சி செய்ய, ஓட்டுப் போட்டு அனுப்பி வைக்கின்றனர்.

ஏன்?

தங்களிடி நடந்த வேண்டும் என்றும், அவர்க ளுக்கு வேண்டிய வசதிகளை இவர்கள் செய்வர் என்ற நம்பிக்கையினால்தான். ஆனால், இவர்களோ ஓட்டுக் கேட்கும்போது மட்டும் மக்க ளுக்கு கனவு கும்பிடு போட்டு, ஆட்சிக்கு வந்த உடன் மக்களை மறந்து சொந்துக்களைச் சேர்ப்ப திலும், கமிஷனிலும் காலத்தைக் கழிக்கின்றனர் என்பதுதான் உண்மை.

இன்று குஜராத்தில் நடந்தது நாளைக்கு இங்கேயும் நடக்கலாம். ஆகவே, அரசி யல்வாதிகளே, இதை ஒரு பாடமாக எடுத்துக் கொண்டு இனி மேலாவது பாவ புண்ணி யத்திற்கு பயந்து நடந்து கொள்ளுங்கள். மக்களுக்கு நல்லதைச் செய்யுங்கள். இல்லையேல் இயற்கையின் சீற்றம் பலரையும் பிச்சைக் காரர் ஆக்கிவிடும்.

— எஸ்.கிருஷ்ணமூர்த்தி, சென்னை.

நிவாரணப் பணியில் ஈடுபடுவும் திருடர்கள்...

டீசல், மெண்ணெய், பூகம்பம், போர் என்று எல்லாவற்றுக்குமே நிவாரண நிதி திரட்டி எப்போதும் 'பீட்டிங்' கொடுப்பதில் எல்லா மாநிலங்களிலும் உள்ளன.

சில நிமிடம் சிந்தியுங்கள்...

உலகம் கண்டாத வகையில் ஓர் இயற்கையின் சீற்றம் குஜராத் பூகம்பம். சீற்றத்தின் முழு வீச்சும் தெரிய வருதோறு நெஞ்சங்கள் பதை பதைத்தன. என் இந்தக் கொடுமை என்ற கேள்விதான் மேல் எழுந்து நிற்கிறது.

பூமி நம்மைத் தாங்கிக் கொண்டிருக்கிறது பூமியையோ தாங்கி தாங்கி நிற்கிறது என்றும், 'நம்மை ஈன்றெடுத்தது தாய் ஈன்றது' என்று வேத மந்திரம் கூறுகிறது.

தனி மனித தாயாகட்டும், சமுதாய முழுக்குமாகட்டும் நினைத்து நிற்கும்போது இயற்கைப் பொங்காமல் தன் கரியத்தைச் செய்யவே செய்கிறது. அக்காலத்தில் நோய் தடுத்த பருவ மழைகளும் மற்ற மாறுதல்களும் அரசுகளின் அலைவும் அரசனின் நீதி வழுவா ஆட்சியின் அளவு கோல் வரை வருத்தப்பட்டது.

மன்னர் எல்லாம், மக்கள் அல்லாதி. இன்று மன்னர்களாக விளங்கும் அரியல்வாதிகளும், அமைச்சர்களும் பேராசையும், தூர்நடத்தையும் கொண்டவர்களாகி விட்டனர். அதுபோலவே பெரும்பான்மை மக்களும் சோம் போய்விட்டனர்.

தர்ம நுலியில் தர்மம் அழிந்து சில இடங்களில் மாலையாக கொண்டு குத்தும் அலை நிலை.

இன்ன காலத்தான் மழையில்லை, வறட்சி, கிருத்த குளிர், பேய்மழை, வெள்ளப் பெருக்கம், பூகம்பம் என்று தொடரும் இயற்கை சீற்றம்.

தர்மத்தை குறிநோண்டிப் புதைத்து மனச்சாட்சி சிறிதும் இல்லாமல் நாட்டை குறையாடி வரும் அரசனே, அவர்கள் வழியில் ஆட்டு மந்தைப் போல் செல்பவர்களே, நிலநடுக்கம் சில நிமிடம் சிந்திப்பீர்கள்.

இயற்கையிடம் இறைஞ்சிடம் மண்டியிட்டு மன்னிப்பு கேளுங்கள். உங்களைத் திருத்திக் கொள்ளுங்கள்.

11/02/2001

— ந.அரிகரசுப்ரமணியன், சென்னை.

தமிழ், பல் விபத்து,

வெள்ளம் போன்ற தேசிய கவிகளில் சமூக விரோதிகள் தங்கள் கைவரிசையைக் காட்ட புறப்பட்டுவிடுவர். எல்லா மாநிலங்களிலும் ஏதாவது ஒரு கட்சித் தொலை ஏந்தி ஒரு குலர் நோட் புக் ஒன்றை விரித்து, 'சார், இரக்கம் காட்டுங்கசார், பூகம்பத்தில் விழுந்தவங்க ஒங்கு உதவிடுங்கள் சார்' என்று பரிதாபமாக வேண்டிக் கொண்டு, கும்பல் கும்பலாக நிதி வசூல் நிலட்டி சாப்பிட தயாராகி இருப்பர்.

பத்திரிகைகள் நிரட்டும் நிதி, தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் நிரட்டும் தொகை, மருத்துவம் முழுமை யாக பூகம்ப நிவாரணப் பணி களுக்குப் போய்ச் சேர்ந்து விடும். வேண்டும் கட்சித் தலைவர்கள் நிரட்டும் நிதி வசூல் எந்தக் கட்சித் தலை மைக்கும் போய்ச் சேராது. அரைக்கும் போல் சேராது.

குஜராத் மாநிலம் புஜ் மாவட்டம் பச்சாவ் தாலுகா தலைகளில் உள்ள மக்கட் தொகை 40 ஆயிரம். இதில் 30 ஆயிரம் பேர் பூகம்பத்தில் பாதிக்கப்பட்டனர். ஆனாலும் எந்திய கும்பல் இந்த பணம் கொழிக்கும் ஊரில் எந்திய வர்களை தாக்கி பணம் பறித்து வருகிறது. தடி, கத்தி, அரிவாளுடன் இரவும் இந்தக் கும்பல் பூகம்பத்தால் இழந்த தன் கடையில் இருந்து தங்க நகைகள் மற்றும் ரூபாய் 70 லட்சத் தையும் பறித்துச் சென்றதாக மன்னாத இரவுப் காவேல்பாய் தாக்கர் கூறு கிறார்.

வியாழம், டெலிவேசன் தாக்கப்பட்ட நிலத்தில் போலீசாரும் இல்லை. பூகம்ப இடபாதிகளுக்கு அமெரிக்க, கால் நிதந்த வர்களை மீட்பதில் கவனம் செலுத்தும் போலீசர், ஆயுதம் ஏந்தி வரும் கொள்ளைக்காரர்களை சமா ளிக்க முடியவில்லை.

பூகம்பத்தைப் பலவந்த முறி கண்ணாடி மனித மிரு கங்களை, வீட்டுப் பணியில் ஈடுபடும் ராணுவத்தினர் வடி இருக்கையிலி கட்டித் தன்ன வேண்டும். துடிக்கும் உயிர களிடம் நிருடும் கலங்கள் குறிக்கப்படுவதால் எந்திய வர்களுக்காவது நிம்மதி கிடைக்கட்டும்.

— எஸ்.காஜா நஜ்முதீன், பரண்டி.

ஜாதிக் கட்சிகளுக்கு யார் காரணம்?

ஒவ்வொரு முறை தேர்தல் வரும்போதும், அரசியல் கட்சிகள்தான் சங்கங்களின் ஆதரவை நாடியது வழக்கம். ஆனால், இந்த தேர்தலுக்கு ஜாதிச் சங்கங்கள் அனைத்தும் தனித்தனி ஜாதிக்கட்சியை உருவெடுத்திருக்கிறது.

தேர்தல்களின்போது மட்டும் அரசியல் கட்சிகள் தங்களின் ஆதரவை நாடுவதை உணர்ந்த ஜாதிச் சங்கங்களின் தலை வர்கள், தங்களின் பிரதிநிதிகள் நேரடியாக தேர்தலில் போட்டி யிடுவதற்கும், பெரிய கட்சி யுடன் கூட்டணி ஏற்படுத்திக் கொள்வதற்கும், மக்களை ஜாதி ரீதியாக ஒன்றுதிரட்டி தனிக்கட் சியை தொடங்கி உள்ளனர்.

இந்தக் கட்சிகள், மக்களிடம் ஜாதி ரீதியான உணர்வுகளை தூண்டி விட்டு, மக்களை பிரித்துக் கொண்டிருக்கிறது. இந்த கட்சிகளின் வளர்ச்சி, வருங்காலத்தில் மக்களிடையே ஜாதி கலவரங்கள் ஏற்பட முக்கிய காரணமாய் அமையும்.

இந்த அபாயத்தை உணர்ந்து, ஜாதிக்கட்சிகளை கட்டாயமாக தடை செய்ய வேண்டும்.

— கு.செல்வராஜ், காங்கயம்.